# 3. இலக்கியச் சோலை

**அலகு அறிமுகம்**

உயர்தனிச் செம்மொழி என்னும் உயர்வு பெற்றது நம் தாய் மொழித் தமிழ். இதன் பழமையும் பெருமையும் நம் இலக்கியங் களிலும் இலக்கணங்களிலும் தான் பொதிந்து கிடக்கின்றன. பழந்தமிழ் இலக்கி யங்களான சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் பண்பாட்டையும் நீதி நெறியையும் வாழ்வியல் முறைகளையும் உல குக்கு எடுத்துரைக்கின்றன. பத்துப்பாட்டு, எட்டுத் தொகை ஆகிய சங்க இலக்கியங்களில் ஒரு சிலவற்றின் அறிமுகம் இவ்வலகில் இடம்பெறு கின்றன.



இலக்கிய அறிவையும், கதை, கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்களின் அடிப் படைக் கூறுகளையும் மாணவர்கள் புரிந்துகொள் ளும் வண்ணம் இந்த அலகு வடிவமைக்கப் பட்டு ள்ளது. இதன் அடிப்படையில் செயல் பாடுகளைச் செய்து மாணவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்குவீர்கள் அல்லவா?

**நேரம்**

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்:
24 பிரிவேளைகள் (சுமார்)

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- சங்க இலக்கியங்கள் பற்றி சிறு குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- வாழ்வியல் கருத்துகள் அடங்கிய நீதிநூல்கள் பற்றி அறிந்திருக்கி றார்கள்.
- இயற்கை வர்ணனைக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- புதிய சொற்களையும் அவற்றிற்கான பொருளையும் கண்டுபிடிக்கிறார்கள்.
- தனது படைப்புகளை மற்றவர்கள் படைப்புகளுடன் ஒப்பிடுகிறார்கள்.
- மரபுக் கவிதை, புதுக்கவிதை வேறுபாடு தெரிந்து கொள்கிறார்கள்.

## கற்றல் துணைக் கருவிகள்

- படத் தொகுப்புகள்.
- அலகோடு தொடர்புடைய பாடல் தொகுப்பு.
- நூலகத்திலுள்ள இலக்கிய நூல்கள்.
- நூலக அகராதி.
- 

## அலகிற்குள் செல்லும்முன்

- சங்க இலக்கியங்கள் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கொள்ளுங்கள்.
- சிறுபஞ்சமூலம், ஏலாதி, புறநானூறு, குற்றாலக்குறவஞ்சி நூல்கள் (நூலகத்திலிருந்து) எடுத்துக்கொள்ளுங்கள்.
- கடினச் சொற்களைப் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள்.
- குற்றாலக்குறவஞ்சி பாடலுக்கு ஒரு எளிய இனிமையான மெட்டமைத்துக் கொள்ளுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள நூலாசிரியர்கள் பற்றிய குறிப்புகள் சேகரித்துக் கொள்ளுங்கள்.

**சிறுபஞ்சமூலம்** - காரியாசான்
**ஏலாதி** - கணிமேதாவியார்
**புறநானூறு** - பொன்முடியார்
**குற்றாலக்குறவஞ்சி** - திரிகூடராசப்பக் கவிராயர்
**இனியொரு விதி செய்வோம்** - மு. மேத்தா
**ஒரு பிரமுகர் (சிறுகதை)** - ஜெயகாந்தன்

# அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ✧ மொழி வகைமை அடிப்படையில் இலக்கிய நூல்கள் அறிதல். | • சங்க இலக்கியங்கள் பற்றி குறிப்பு | ✧ சங்க இலக்கியங்கள் பற்றி குறிப்புகள் எழுதுகிறார்கள். |
| ✧ சிறுபஞ்சமூலம், ஏலாதி, குற்றாலக் குறவஞ்சி, புறநானூறு போன்ற அற. புற இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் கருத்துகளை அறிதல். | • நீதிநூல்கள் - விளக்கம் | ¤ வாழ்வியல் கருத்துகள் அடங்கிய நீதிநூல்கள் பற்றி அறிந்திருக்கிறார்கள். |
| ✧ வர்ணனைச் சொற்கள் பயன்படுத்துதல்.<br>✧ கவர்ச்சியான நடை, மொழிப் பயன்பாடு. | • வர்ணனைக் கட்டுரை | ¤ இயற்கை வர்ணனைக் கட்டுரைகள் எழுதுகிறார்கள். |
| ✧ பொருத்தமான மெட்டமைத்தல்.<br>✧ குரல் வளம், லயத்துடன் பாடுதல். | • கவிதை - மெட்டு | ¤ பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுகிறார்கள். |
| ✧ இலக்கிய நூல்களின் கடினச் சொற்களைக் கண்டு, அகராதி பயன்படுத்திப் பொருள் காணுதல். | • புதிய சொற்கள் பொருள் | ¤ புதிய சொற்களைக் கண்டுபிடித்து அவற்றிற்கான பொருள் காண்கிறார்கள். |
| ✧ ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிடுதல்.<br>✧ மேம்படுத்துதல். | • ஒப்பீடு - பாடல் | ¤ தங்கள் படைப்புகளை மற்றவர்கள் படைப்புகளுடன் ஒப்பிடுகிறார்கள். |
| ✧ இலக்கண மொழிக்கூறு, எதுகை, மோனை அறிதல். | • மரபுக் கவிதை, புதுக்கவிதை | ¤ மரபுக் கவிதை, புதுக்கவிதை வேறுபாட்டைத் தெரிந்துகொள்கிறார்கள். |

**நுழைவுச் செயல்பாடு**

கீழ் வகுப்புகளில் இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் பற்றி மாணவர்கள் கற்றுள்ளனர். அவற்றை நினைவுபடுத்தி கலந்துரையாடலைத் தொடங்குங்கள். திரிகடுகம் என்பதன் பொருளை நினைவுபடுத்திக் கூற முடியமா? அதில் அடங்கியுள்ள மூன்று மருந்துகள் எவை? (சுக்கு, மிளகு, திப்பிலி) இன்னா நாற்பது நூலின் ஆசிரியர் பெயர் என்ன? அதில் எத்தனை பாடல்கள் உள்ளன? போன்ற கேள்விகள் கேட்டு கலந்துரையாடலை முழுமையாக்குங்கள். அதுபோல சங்க இலக்கிய நூல்களில் உள்ள சில பாடல்கள் நம் பாடப்பகுதியில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவை நம் வாழ்விற்கு வழிகாட்டும் கருத் துகளாகப் பாடல்கள் வடிவில் கூறப்பட்டுள்ளன. அவற்றை வாசித்துப் பார்க்கலாம் என்று பாடப்பகுதிக்குள் நுழையலாம்.

## வழிகாட்டிகள்

**சிறுபஞ்சமூலம்**

இப்பகுதியில் கூறப்பட்டுள்ள பாடலை ஒரு முறை மாணவர்களை வாசிக்கச் செய்யுங்கள். வாசித்தலில் பின்னடைவு இருக்கலாம். நீங்கள் ஒருமுறை வாசியுங்கள். பின்பு ஒரு முறை மாணவர்களை வாசிக்கச் செய்யுங்கள். ஒவ்வொருவராக வாசிக்கட்டும். பொருள் கூற முயற்சி செய்யட்டும். புதிய சொற்களுக்கு அகர முதலியைப் பார்த்துப் பொருள் கண்டுபிடிக்கட்டும். பிறகு முழுப் பாடலுக்கான பொருளையும் கூற உதவி செய்யுங்கள்.

**பொருள் :-** ஒருவன் கூறும் இனிய சொற்களால் நல்ல உறவு உருவாகும். நல்லவை அல்லாத தீய சொற்களால் பகைமையே உருவாகும். மென்மையான சொற்களால் பெருமையும் ஒப்பில்லாத அருளும் உண்டாகும். இரக்கம் பொருந்திய நல் மனத்தால் கேடு இல்லாத வீடுபேறு உண்டாகும்.

**சிறுபஞ்சமூலம்**

சிறு - சிறிய, பஞ்ச - ஐந்து, மூலம் - வேர்கள்

சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகைகளின் வேர்கள் நோய் தீர்ப்பன. அதுபோல் இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள ஐந்து கருத்துக்களும் மனிதரின் மனநோயைத் தீர்ப்பன. 104 நேரிசை வெண்பாக்களைக் கொண்ட நூல்.

**ஏலாதி**

குழந்தைகள் வாசிக்கட்டும். தனி நபராகவே வாசிக்கட்டும். முன் பாடலைப் போலவே இதையும் நீங்கள் ஒன்றிரண்டு முறை வாசியுங்கள். குழந்தைகள் கவனிக்கட்டும். பொருள் காண முயற்சி செய்யட்டும். கடின வார்த்தைகளுக்குப் பொருள் கண்டுபிடிக்கட்டும்.

முழுப்பாடலுக்கான பொருளையும் விளக்கிச் சொல்லிக் கொடுப்பீர்கள் அல்லவா?

**பொருள் :-** யானையும், குதிரையும், பொன்னும், கன்னிகையும், பசுவின் கூட்டமும், மற்றும் பொருள்களும் வேண்டியவர்களுக்கு வகையறிந்து கொடுக்கின்றவனும் மாதவர்க்குப் பசுவின் நெய்யுடன் உணவளித்து அன்பு செய்கின்றவனும் ஆகிய ஒருவன் குபேரன் என்று பெயர் பெற்று வாழ்வான்.

**வைசிரவணன் - குபேரன்**

**ஏலாதி**

ஏலம் முதலான ஆறு பொருட்களைக் குறிக்கும். அவை ஏலம், இலவங்கம், நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்பன. இவை சேர்ந்து வருந்தும் நோய் தீர்த்து வலிமை சேர்க்கும். இதுபோல் வாழ்க்கைக்குப் பயன்படும் கருத்துக்களைக் கொண்ட நூல் ஏலாதி. 81 பாடல்கள் கொண்டது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

### புறநானூறு

தொடர்ந்து புறநானூற்றுப் பாடலையும் மாணவர்களே வாசிக்கட்டும். பொருள் கூறட்டும். முழுப்பாடலுக்கான பொருளையும் சொல்லிக் கொடுங்கள்.

**பொருள் :-** நல்ல பண்புடைய மக்களைப் பெறுவதே ஒரு நல்ல தாயின் கடமை. அவனைக் கற்றறிந்த நல்ல பண்பாளனாக ஆக்குவதே ஒரு தந்தையின் கடமை. அவனுக்கு நல்ல ஆயுதங்களை வடிவமைத்துக் கொடுப்பதே ஒரு கொல்லனின் கடமை. அவனை நல்ல குடிமகனாக ஆக்குவது அந்த நாட்டு மன்னனின் கடமை. ஒளி வீசும் வாளைப் பயன்படுத்தி, யானையை வீழ்த்தி நாட்டுக்கு வெற்றி யைத் தேடித்தருவது அந்த இளைஞனின் கடமை.

**புறநானூறு**

சங்ககாலத்தில் எழுந்த எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. வீரம், கொடை, கல்வி முதலான புறச் செய்திகளைப் பற்றிப் பாடும் பாடல்கள் புறப்பாடல்கள் எனப்படும். இத்தகைய நானூறு புறப்பாடல்களின் தொகுப்பே புறநானூறு. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் எழுதப்பட்டவை இப்பாடல்கள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

**புறநானூறு நூலை முதற்பதிப்புச் செய்தவர்**
**தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யர்.**
**ஆண்டு 1894**

### குற்றாலக் குறவஞ்சி

கொடுக்கப்பட்டுள்ள இலக்கியப் பாடல்களுள் மெட்டமைத்துப் பாடுவதற்கான ஓர் எளிய பாடல் இது. மாணவர் பலமுறை வாசிக்கட்டும். குற்றாலம் என்ற இடத்திற்குப் போய் இருக்கிறீர்களா? தென்காசி என்ற ஊருக்குப் பக்கத்தில் உள்ள குற்றால மலையில் அமைந்துள்ள கோவிலில் உள்ள குற்றால நாதரைப் பற்றிய பாடல்களே இவை. அதில் குற்றால மலையின் அழகை

வர்ணித்து ஒரு குறத்திப் பாடுவதே நமது பாடப்பகுதி என்று கலந்துரையாடிப் பாடலை இனிமையான வாசிப்பாக ஆக்குவீர்கள் அல்லவா?

**பொருள் :-** ஆண் குரங்குகள் தங்களுடைய இணையான பெண் குரங்குகளுக்குப் பழங்களைப் பறித்துக் கொடுத்துக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும். அந்தப் பெண் குரங்குகள் தவறவிடும் பழங்களுக்காக கானகத்தில் வாழும் வேட்டுவர்கள் தங்கள் கண்களால் வானத்துத் தேவர்களை அழைப்பார்கள். சித்தர்கள் வந்து அழிவில்லாத உடலைத் தருவார்கள். தேனருவியில் இருந்து விழுகின்ற தண்ணீர் பனிபோல எழும்பி வானின் வழியாக ஓடும். அப்படி ஓடுகின்றதால் ஏற்படும் வழுக்கில் சூரிய பகவான் ஏறி வருகின்ற தேரின் சக்கரமும் தேரை இழுத்து வரும் குதிரைகளின் கால்களும் வழுக்கி விடும். இத்தகைய அழகு நிறைந்த எங்களது குற்றால மலையில் தான் அதன் நாதராகிய இளம்பிறையைத் தனது முடியில் அலங்காரமாகக் கொண்டிருக்கும் குற்றால நாதர் எழுந்தருளி உள்ளார்.



### வாசிப்போம் கண்டுபிடிப்போம்

கொடுக்கப்பட்டுள்ள பாடல்களை எல்லாம் மாணவர்கள், ஆசிரியருடன் இணைந்தும் தனியாகவும் குழுவாகவும் வாசித்து, புதிய சொற்களுக்குப் பொருள் காணவும், பாடலின் பொருளை முழுமையாகத் தெரிந்து கொள்ளவும் செய்த பிறகு செயல்பாடுகளுக்குள் செல்லுங்கள். பாடப்பகுதியோடு கொடுக்கப்பட்டுள்ள வினாக்களைப் போன்று வேறு வினாக்கள் கேளுங்கள். மாணவர்கள் விடை கூறட்டும்.

- ஏலாதி பாடலில் கூறப்பட்டுள்ள இரண்டு மிருகங்கள் எவை?
- ஒருவனைச் சான்றோன் ஆக்குவது யாருடைய கடமை?
- வானவரை அழைப்பவர்கள் யார்?
- 
- 

தொடர்ந்து புத்தகத்தில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கும் விடை கண்டுபிடிக்கட்டும். வகுப்பறைக் குறிப்பேடுகளிலும் வினா விடைகளை எழுதச் செய்யுங்கள்.

**சிறுபஞ்சமூலம், ஏலாதி, புறநானூறு, குற்றாலக்குறவஞ்சி பாடல்களையும் வகுப்பறைக் குறிப்பேட்டில் எழுதச் செய்வீர்கள் அல்லவா?**

வாசித்தலையும், எழுதுதலையும் தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்தலாம்.



## சொற்களைக் கண்டுபிடிப்போம்

எதுகை, மோனை, இயைபுச் சொற்கள் பற்றி முதல் பகுதியிலே விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை இலக்கியப் பாடல்களிலும் கண்டுபிடிக்கச் சொல்லலாம் அல்லவா? கண்டுபிடிக்கட்டும். எழுதட்டும்.

| | | |
|---|---|---|
| இன்சொலன் | கடனே | அழைப்பர் |
| வன்சொலன் | கடனே | விளைப்பர் |
| யானை | கடனே | |
| ஏனை | தந்தைக்கு | ஒழுகும் |
| எண்ணன் | கொல்லற்கு | வழுகும் |
| வண்ணன் | வேந்தற்கு | கொஞ்சும் |
| ஈன்று | வானரங்கள் | கெஞ்சும் |
| சான்றோன் | கானவர்கள் | |
| ஒளிறு | தேனருவி | |
| களிறு | கூனலிளம் | |



## ஒப்பிடுவோம்

எதுகை, மோனை, இயைபு அமைந்த சொற்களைக் கண்டுபிடித்தார்கள் அல்லவா? கருத்துகளையும் புரிந்துகொண்டார்கள். இதில் சிறுபஞ்சமூலம் பாடலின் கருத்துகளோடு கொடுக்கப்பட்டுள்ள

**இனிய உளவாக இன்னாத கூறல்**

**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

என்ற திருக்குறளின் கருத்துகளையும் ஒப்பிட்டுக் கருத்துகளைக் கூறட்டும். எழுதட்டும்.

**நினைவுப் படுத்திக்கொள்ளுங்கள் – ஒப்பிடுதல்**

பொருள் நயம், கருத்து, அணி நயம், பாடல் அமைப்பு

**புதுக்கவிதை**

- மரபுக்கவிதைக்கு மாறுபட்டது
- வெண்பா, அகவற்பா – இவற்றைப்பற்றி இல்லாமல் கருத்துக்கு முக்கியத்துவம்
- புதிய கருத்தைப் புதுமையாய் கூறும் உத்தி
- அளவில் சிறியது
- உணர்ச்சிக் கேற்ற வடிவம்

## மெட்டமைக்கலாம்

- குற்றாலக் குறவஞ்சிப் பாடலுக்கு மெட்டமைக்க வேண்டும்.
- மாணவர்கள் தனித்தனியாக மெட்டமைத்துப் பாடட்டும்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
- தனித்தனிக் குழுவாக மெட்டு அமைத்துப் பாடட்டும்.
- நீங்கள் ஏற்கனவே இசையமைத்து வைத்துள்ள மெட்டைப் பாடிக் காட்டுங்கள்.
- சிறந்த மெட்டை அவர்களே தேர்ந்தெடுத்து அனைவரும் பாடட்டும். பாராட்டுங்கள்.
- ஒரு போட்டியாக இதை நடத்தலாமே.



## பொருள் காண்போம்

இந்தச் செயல்பாட்டைப் பாடப்பகுதியை வாசிக்கும் போதே நாம் செய்துள்ளோம். அதை நினைவில் கொண்டு இந்தச் செயல்பாட்டில் கொடுத்துள்ள வார்த்தைகளுக்குப் பொருள் காணட்டும். அகர முதலியையும் உபயோகப்படுத்திக் கொள்ளட்டும்.

| | | |
|---|---|---|
| **ஆனிரை** | - | பசுக்கூட்டம் |
| **வேந்தர்** | - | அரசர் |
| **வானரம்** | - | ஆண் குரங்கு |
| **செங்கதிரோன்** | - | சூரியன் |
| **சான்றோன்** | - | மேன்மையானவர் |
| **அருஞ்சமம்** | - | கடும் போர் |
| **மந்தி** | - | பெண் குரங்கு |
| **நல்கல்** | - | கொடுத்தல் |
| **விழி** | - | கண்கள் |
| **வானவர்** | - | தேவர்கள் |
| **பிறை** | - | நிலவு |

## கண்டுபிடிக்கட்டும் குறிப்பேடுகளில் எழுதட்டும்

**அருஞ்சொற்களை நாமே தேர்ந்தெடுத்து அவற்றின் பொருளையும் நாமே கூறும்போது வெறுமனே தெரிந்துகொள்ளுதல் என்ற நிலையோடு நின்று விடுகிறது. அச்சொற்களைப் பயன்படுத்தும் சூழல் ஏற்படும்போது அவற்றைப் பயன்படுத்தக் குழந்தைக்குத் தெரியாமல்**

**போய்விடுகிறது. இதன் விளைவாகக் அவர்களுக்குச் சொல்லாட்சித் திறனைப் பெறுகின்ற வாய்ப்பில்லாமல் போகும் நிலை ஏற்படுகின்றது. எனவே இதைச் செயல்படுத்த கீழ்க்கண்டவற்றை நினைவில் கொள்ளுங்கள்.**

- வாசிப்புப் பகுதியின் கருத்து என்ன என்பதை அறிய முதன் முறை வாசிப்பு.
- அருஞ்சொற்பொருளைக் கண்டுபிடிக்க மீண்டும் வாசித்தல்.
- பொருளை ஊகிக்க மீண்டும் வாசித்தல்.
- சரிதானா எனப் பரிசோதிக்க மீண்டும் வாசித்தல்.
- பல பொருள் கண்டால் ஊகித்த பொருளைக் காரண காரியத்துடன் நிறுவுதல்.
- தெளிவில்லாவிட்டால் அகராதியின் (அகரமுதலி) உதவியை நாடுதல்.
- பொருள் அறிந்த சொற்களைப் பயன்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்குதல்.

## இனியொரு விதி செய்வோம்
## (புதுக்கவிதை)

**மு. மேத்தா** அவர்களின் புதுக்கவிதையை வாசிக்கச் செய்யவேண்டும். சங்க இலக்கியப் பாடல்களை வாசித்தோம். ஒரு புதுக்கவிதையை வாசித்துப் பார்க்கலாம் என்று கூறி புதுக்கவிதை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். புதுமையும், இனிமையும், எளிமையும் கொண்டவை; படிக்கப் படிக்க மகிழ்ச்சி தருபவை; சின்னச் சின்ன வரிகளில் சிறந்த கருத்துக்களைச் சொல்பவை; அதிக இலக்கண வரம்பு இல்லாதவை என்று கூறுங்கள். மேத்தா பற்றிய குறிப்புகளையும் விளக்கிக் கூறுவீர்கள் அல்லவா? குழந்தைகள் கவனித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம் ஏற்றத் தாழ்வுடன், தாள பாவனையுடன் கவிதையை வாசியுங்கள். உரைநடை வாசிப்பிற்கும் கவிதை வாசிப்பிற்கும் உள்ள வேறுபாட்டை மாணவர்கள் உணர வேண்டும். ஒற்றுமையை வலியுறுத்தும் கவிதை வரிகளை மாணவர்கள் புரிந்து கொண்டு வாசிக்கட்டும். தனிச் செயல்பாடாகவும் குழுச் செயல்பாடாகவும் கவிதை வாசிப்பைக் கொடுப்பீர்கள் அல்லவா?

## ஹைக்கூ கவிதைகள்

- ஹைக்கூ கவிதைகளை வாசிக்கச் செய்யுங்கள்
- பொருள் விளங்கும்படியாக ஒவ்வொருவரும் வாசிக்கட்டும்.
- புதிய சொற்களுக்குப் பொருள் காணச் செய்யுங்கள்
- இப்பொழுது மீண்டும் ஒருமுறை நீங்கள் வாசியுங்கள்
- மீண்டும் மாணவர்கள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்
- யார் தவறு இல்லாமல் வாசிப்பார்கள்? ஒவ்வொருவரும் வாசிக்கட்டும்
- வகுப்புக் குறிப்பேடுகளில் எழுதட்டும்

**ஹைக்கூ**

- மூன்று வரிகள் உடையவை
- அழுத்தமான பொருள்
- விடுகதைச் சாயல்
- உவமை, உருவகம், முரண் போன்ற வடிவங்களில் வரலாம்



### பிடித்த வரிகள்

* புதுக்கவிதை, ஹைக்கூ கவிதைகள் இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை மாணவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் அல்லவா? புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் இவற்றை வாசிக்கும் ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். தொடர்ந்து பாடப்புத்தகச் செயல்பாடுகளுக்குச் செல்லலாம். புதுக் கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரி எது ஏன்? இதுபோன்ற ஒரு செயல்பாடு முதல் அலகிலேயே வந்துள்ளது. அந்தச் செயல்பாட்டுக்கான முறைகளைப் பின்பற்றுவீர்கள் அல்லவா?

* அன்பு, பாசம், இயற்கை, மழை, தண்ணீர் போன்ற தலைப்புகளில் புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் எழுத வேண்டும். நீங்கள் சில கவிதைகளை எழுதி வைத்துக் கொள்வீர்கள் அல்லவா?

மாணவர்கள் எழுதும் கவிதைகளைக் கவிதைத் தொகுப்பாக்கி மலர் வடிவம் கொடுங்கள். மாணவர்களிடம் கலந்துரையாடி கவிதை மலருக்குப் பொருத்தமான பெயர் கொடுங்கள். அம்மலரில் எல்லா மாணவர்களின் பங்களிப்பையும் உறுதி செய்ய வேண்டும். சிறந்த கவிதையை மாணவர்களே தேர்வு செய்யட்டும். பரிசளித்து ஊக்குவியுங்கள்.

**புதுக்கவிதைகள் மூலம்...**

- புதுக்கவிதையை அறிந்துகொள்ளலாம்
- கருத்தைப் புரிந்து கொள்ள...
- கவிதையின் அழகை ரசிக்க...
- கவிதைகள் சேகரிக்க/எழுத...
- பொருத்தமான படம் வரைய
- கற்பனைத்திறனை வளர்க்க
- பிற கவிதைகளுடன் ஒப்பிட

கவிதை வாசித்தல் கவிதை எழுதுதல் இவற்றைத் தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

# புது (சிறு) கவிதைகள்

## அன்பு

அன்பு மழை பொழிகிறாள்
அன்னை இவள் அல்லவா?
கொஞ்சு மொழி மொழிகிறாள்
குழந்தை நானும் அல்லவா?

## தண்ணீர்

தாகம் தன்னைத் தீர்த்திடும்
தாவி நீந்த உதவிடும்
பாகமோடு சமைக்கவே
பாரில் நீரும் உதவிடும்

## மழை

மழையே மழையே வருவாயே
மண்ணும் குளிரச் செய்வாயே
தழையும் கிளையும் செழிப்பதற்கே
தரையை நோக்கிப் பொழிவாயே!

# ஹைக்கூ

## அன்பு

பணத்தைப் பார்க்காமல்
மனம் தரும்
அரு மருந்து

## பாசம்

பகைவனையும்
சிக்க வைக்கும்
மாய வலை

## மழை

வறுமை விவசாயிக்கு
வசந்தமகள் வரவு
கோடை மழை

## இயற்கை

ஆண்டவன் எழுதிய
அற்புதக் கவிதை
இயற்கை

## இனிமைத் தமிழ்

தமிழின் பெருமைகளையும் சிறப்புகளையும் விளக்கும் கட்டுரைப் பகுதியே இது. இதில் வர்ணனைச் சொற்கள், மேற்கோள் பாடல்கள் போன்றவை விரவி வந்துள்ளன. தமிழ் பற்றிய பாடல்கள் மூலம் பாடப்பகுதிக்குள் செல்லலாம்.

**செந்தமிழ் நாடென்னும் போதினிலே - பாரதியார்**

**தமிழுக்கு அமுதென்று பேர் - பாரதிதாசன்**

போன்ற பாடல் வரிகளைப் பாடிக் கட்டுரையை வாசிக்கத் தூண்டுங்கள். மாணவர்கள் வாசிக்கட்டும்.

- ♦ தமிழ் வரிவடிவம் தோன்றியது எப்போது?
- ♦ தமிழ் என்னும் சொல்லுக்குப் பிங்கல நிகண்டு கூறும் கருத்து என்ன?
- ♦ பழமையான இலக்கணநூல் எது?
- ♦ திராவிட மொழிகள் எவை?
- ♦ பழமையான மொழிகள் எவை?
- ♦ சிற்றிலக்கியங்கள் எத்தனை?
- ♦ வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
  வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
  - என்று பாடிய புலவர் யார்?
- ♦ தமிழ் மொழி பெற்றுள்ள சிறப்புத் தகுதி என்ன?
- ♦ செம்மொழி இலக்கியங்கள் எத்தனை? அவை எவை?

கேள்விகளைக் கேளுங்கள். மாணவர்கள் வாசித்து விடை கண்டுபிடிக்கட்டும். குறிப்பேடுகளில் வினா - விடைகளை எழுதட்டும். மதிப்பீடு செய்யுங்கள்.



**சிறப்புப் பெயர்களை எழுதுக**

பாடப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை கண்டுபிடித்தார்கள் அல்லவா? தொடர்ந்து, தமிழ் மொழிக்குப் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன என்றும், இளமையாகவே இருப்பதால் அதைக் கன்னித் தமிழ் என்கிறோம் என்றும் இதுபோல தமிழுக்கான சிறப்புப் பெயர்கள் சிலவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள் என்றும் கூறிச் செயல்பாட்டைச் செய்யச் சொல்லுங்கள், எழுதட்டும்.

**ஆசிரியர் உதவிக்கு**

| | | |
|---|---|---|
| கன்னித்தமிழ் | முத்தமிழ் | சங்கத்தமிழ் |
| செந்தமிழ் | நற்றமிழ் | அமுதத்தமிழ் |
| பைந்தமிழ் | இயல்தமிழ் | அறத்தமிழ் |
| இன்பத்தமிழ் | இசைத்தமிழ் | தொன்மைத்தமிழ் |
| தீந்தமிழ் | நாடகத்தமிழ் | செழுமைத் தமிழ் |

## பாரதிதாசன் பாடல்.

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத் தமிழ்
எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணம் என்று பேர் - இன்பத் தமிழ்
எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத் தமிழ்
எங்கள் உரிமைச் செம் பயிருக்கு பேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத் தமிழ்
நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத் தமிழ்
எங்கள் அசதிக்கு சுடர்தந்தத் தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத் தமிழ்
எங்கள் கவிதைக்கு வைரத்திண் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத் தமிழ்
எங்கள் வளமிக்க உளமுற்ற தீ.



## வர்ணனை எழுதுவோம்

காலைக் கதிரவன் உதிக்கும் காட்சியை வர்ணித்து எழுத வேண்டும். வர்ணனை பற்றி மாணவர்கள் கீழ் வகுப்புகளில் படித்திருப்பார்கள். நினைவுபடுத்துங்கள். கட்டுரையாகவோ, கவிதையாகவோ எழுதட்டும். எப்படித் தொடங்கலாம். தங்களுக்குத் தெரிந்த அல்லது பாடப்பகுதியிலிருந்து ஏதாவது வர்ணனைத் தொடர்களைக் கண்டுபிடித்து எழுதட்டும்.

**வர்ணனை**

- பொருத்தமான தலைப்பு
- வர்ணனைத் தொடர்கள்
- காட்சி விளக்கங்கள்
- அடுக்குச் சொற்கள்
- ஒரே ஒலிச் சொற்கள்
- கற்பனை
- உவமைகள்
- உருவகங்கள்

**தேனொக்கும் செந்தமிழே**

**தேன்போல இனிக்கும் தமிழே** என்று பாரதிதாசன் கூறுகிறார். அதுபோல வர்ணனைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

**பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற புல்தரை,**
**நீலக்குடை விரித்தது போன்ற வான்**

இதுபோல எழுதட்டும். தனிநபர் செயல்பாடாகக் கொடுங்கள். பிறகு குழுச் செயல்பாடாகக் கொடுங்கள். ஒவ்வொரு குழுவினரும் கூறிய வர்ணனைத் தொடர்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுத வேண்டும். அட்டவணைப்படுத்தி எழுதுங்கள். அவற்றைப் பயன்படுத்திச் சிறு கட்டுரையாகவோ கவிதையாகவோ எழுதட்டும். எழுதுதலைத் தொடர் நிலை மதிப்பீட்டுக்கு உட்படுத்தலாம். படைப்புகளைப் படைப்புத் தொகுப்பில் சேருங்கள்.

## ஒரு பிரமுகர் : சிறுகதை

ஜெயகாந்தன் எழுதிய ஒரு பிரமுகர் என்ற சிறுகதை பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கதையை நன்கு வாசித்துப் புரிந்துகொள்ளட்டும். கதை வாசிப்பிற்கான உத்திகள் முன்பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ளதை நினைவுபடுத்துவீர்கள் அல்லவா? ஒரு எறும்பின் மனநிலையைக் கூறுவதாக அமைந்துள்ளது. மாணவர்கள் கதையை வாசித்துப் புரிந்துகொள்ளட்டும். ஜெயகாந்தனைப் பற்றியும் சிறு குறிப்புகள் கொடுங்கள். கதாசிரியரைப் பற்றியும் தெரிந்து கொள்ளட்டும். பாடப்பகுதியில் உள்ள கடினச் சொற்களைக் கண்டுபிடித்துப் பொருள் கண்டுபிடிக்கட்டும். வாசித்த கதையை மாணவர்கள் வகுப்பில் கூறச் செய்யுங்கள். பேச்சுத் தமிழில் உள்ள சொற்களை மாற்றி நல்ல தமிழில் கூறச் செய்யுங்கள்.

**என்ன இது. இந்த வெய்ய காலத்திலே திடீர்னு மழைப் புடிச்சிக்கிடுத்தே** – பேச்சுத் தமிழ்

**என்ன இது, இந்த வெயில் காலத்திலும் திடீரென்று மழை பிடித்துக் கொண்டதே –** நல்ல தமிழ்

இதுபோன்ற செயல்பாடுகளை நடத்திச் சிறுகதை வாசித்தலை முழுமையாக்குவீர்கள் அல்லவா?

**ஜெயகாந்தன்**

**பிறப்பு :**

ஏப்ரல் 24, 1934 கடலூர், தமிழ்நாடு

**விருதுகள் :**

ஞானபீடம், சாகித்ய அகாடமி, பத்மபூஷண்

**நாவல்கள் :**

கைவிலங்கு, பிரம்ம உபதேசம்

**திரைப்படமான நாவல் :**

சில நேரங்களில் சில மனிதர்கள்

**சிறுகதைத் தொகுப்பு :**

ஒரு பிடி சோறு?

### இரண்டு சொற்களைக் கண்டு பிடியுங்கள்

பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதல் போன்ற செயல்பாடுகளைப் பாடவாசிப்பின் போதும் கடினச் சொற்களுக்குப் பொருள் காணும் போதும் சொல்லிக் கொடுத்திருப்பீர்கள் அல்லவா? தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள சொற்களையும் பிரித்து எழுதிப் பார்க்கட்டும்.

| | | |
|---|---|---|
| **மண்ணுருண்டை** | – | **மண், உருண்டை** |
| **நீர்த்திவலை** | – | **நீர், திவலை** |
| **இரண்டடி** | – | **இரண்டு, அடி** |
| **ஒன்றொன்றாய்** | – | **ஒன்று, ஒன்றாய்** |
| **விழுந்தடித்து** | – | **விழுந்து, அடித்து** |

***இன்னும் கண்டுபிடிக்கட்டும்***

| | | |
|---|---|---|
| **ஒண்ணுமில்லாததுக்கு** | – | **ஒன்றும், இல்லாததுக்கு** |
| **நடுக்காம்பு** | – | **நடு, காம்பு** |
| **வேர்ப்பகுதி** | – | **வேர், பகுதி** |
| **கிராமத்துச் சாலை** | – | **கிராமம், சாலை** |

இரண்டு சொற்களைக் கண்டுபிடித்துக் குறிப்பேடுகளில் எழுதட்டும்



## பொருள் கண்டுபிடியுங்கள்

**அகர முதலி**யைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் காணட்டும். சொற்களைப் பயன்படுத்திப் புதிய வாக்கியங்கள் அமைக்கட்டும். புதிய சொற்றொடர் அமைக்க உதவுங்கள்.

**உஷ்ணம்** - **வெப்பம்.** இன்றைக்கு உஷ்ணம் அதிகமாக உள்ளது

**வாஸ்தவம்** - **உண்மை.** நேற்று நான் சொன்ன காரியங்கள் எல்லாம் வாஸ்தவமானவை.

**வியப்பு** - **ஆச்சரியம்** இவ்வளவு கூட்டமா? என்று வியப்பு அடைந்தேன்

**பிரளயம்** - **வெள்ளப்பெருக்கு** ..........................................................................

**ஆகிருதி** - **வடிவம்** ..........................................................................................

புதிய சொற்றொடர்கள் அமைத்து எழுதட்டும். அதைக் குறிப்பேடுகளிலும் எழுதட்டும். எழுதுதலைத் தொடர் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தலாம்.

## அலகு மதிப்பீடு (மாதிரி)

### செயல்பாடு 1

கன்னியாகுமரியின் இயற்கை அழகும், பெருமையும் என்றும் மகிழ்ச்சி தருபவை. கல்விச்சுற்றுலா சென்ற கண்ணன் சூரியன் மறையும் இயற்கைக் காட்சியைப் பற்றி ஒரு அழகான வர்ணனைக் கட்டுரை எழுதிப் பரிசும் பெற்றான். நீங்களும் அதுபோல நிறைய இயற்கைக் காட்சிகளைப் பார்த்து இரசித்திருப்பீர்கள். உங்கள் மனதைக் கவர்ந்த ஒரு காட்சியை **வர்ணனைக் கட்டுரையாக** எழுதுங்கள்.

### செயல்பாடு 2

மூன்று வரிகளில் அமைந்தவை, உருவகம், உவமை, விடுகதை போன்ற வடிவங்களில் எழுப்படுபவை - இவையே ஹைக்கூ கவிதைகள். பின் வரும் தலைப்புகளில் **ஹைக்கூ கவிதைகள்** எழுதிப் பாருங்கள்.

- ஆசிரியர், அம்மா, பள்ளிக்கூடம், கிளி, இடி

### செயல்பாடு 3

**நூல் குறிப்பு** எழுதுங்கள்

- சிறுபஞ்சமூலம்
- ஏலாதி

## செயல்பாடு 4

குற்றாலக் குறவஞ்சி - **ஆசிரியர் குறிப்பு** எழுதுங்கள்.

## செயல்பாடு 5

தாய், தந்தை, கொல்லன், அரசன், இளைஞன் ஆகியோரின் கடமைகளாக புறநானூறு கூறும் கருத்துகளை எழுதுங்கள்.

* * *

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

1. **வர்ணனைக் கட்டுரை**
   - அழகுத் தமிழில் எழுதப்பட்டுள்ளது
   - நுண் சிறப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன
   - நடையும் கவர்ச்சியும்
2. **ஹைக்கூ கவிதைகள்**
   - பொருள்.
   - உவமை, உருவம், விடுகதை போன்ற வடிவம்.
   - குறிப்பிட்ட வரிகள்.
3. **நூற்குறிப்பு எழுதுதல்**

   (அலகு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.)
4. **ஆசிரியர் குறிப்பு**
   - பெயர், பிறப்பு, சிறப்புப்பெயர்.
   - பெற்றோர்.
   - எழுதிய பிற நூல்கள்.